

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 28.09.2026


# மாண்பு இழந்த முதலமைச்சர்!

மதுராந்தகம் இடைத்தேர்தல் பரப்புரைக்காக வந்த முதலமைச்சர் விஜய் பேசி இருக்கும் பேச்சுகள் அவர் எந்தளவுக்கு மாண்பு இழந்தவராக இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அரசியலமைப்புச் சட்டப்படி முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டவரின் பேச்சும், உடல்மொழியும் அருவெறுப்பாக இருக்கிறது.

பத்து நிமிட உரையில் நாற்பது முறை தி.மு.க.வை கரித்துக் கொட்டி இருக்கிறார் விஜய். சட்டியில் இருப்பது தானே அகப்பையில் வரும். நரகலை எடுத்து பொதுமக்கள் மீது வீசுகிறார். சாதனைகள் என்று சொல்லிக் கொள்ள ஏதுமில்லாத காரணத்தால் அதற்காகவே ஜெம் வீரமணி வழக்கை எடுத்து வந்து அவிழ்த்து விட்டுள்ளார் விஜய்.

**உங்கள் கையில் அதிகாரம் இருக்கிறது. உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள். சட்டத்தின் முன்னால் நிறுத்துங்கள். தண்டனை வாங்கித் தாருங்கள். இந்தக் குற்றத்தை மறைத்தவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அதனைச் செய்யுங்கள். அதை விட்டுவிட்டு, மதுராந்தகம் தேர்தலுக்கும் ஜெம் வீரமணிக்கும் என்ன தொடர்பு? இந்த தேர்தலில் இந்த பிரச்னையை வைத்து அவதூறு கிளப்ப வேண்டும் என்று காத்திருந்துள்ளார் விஜய். இதை விட கெட்ட எண்ணம் என்ன இருக்க முடியும்?**

ஜெம் வீரமணி செய்த செயல்கள் மனிதத்தன்மைக்கு விரோதம் ஆனவை. எது உச்சபட்ச தண்டனையோ அதை அவருக்கு வழங்க வேண்டும். அதில் யாருக்கும் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இதனைக் கண்டித்து அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அறிக்கை விட்டுவிட்டார்கள், முதலமைச்சர் விஜய்யைத் தவிர.

ஆகஸ்ட் 28 ஆம் தேதியன்று ஜெம் வீரமணி கைது செய்யப்பட்டார். செப்டம்பர் 25 ஆம் தேதி மதுராந்தகம் தேர்தல் பரப்புரையில் பேசுவதற்கு முன்பு வரை இது பற்றி விஜய் பேசினாரா என்றால் இல்லை. கண்டிக்கவில்லை. அதைச் செய்யாமல் ஒரு மாத காலம் வாயை மூடிக் கொண்டு இருந்து விட்டு, இடைத்தேர்தலுக்காக எதற்காக திறக்க வேண்டும்?

இவர் ஆட்சிக்கு வந்து தான் நடவடிக்கை எடுத்தாராம். இதை விட பச்சைப் பொய் இருக்க முடியாது. எஃப்.ஐ. ஆர். பதிவு செய்ததே தி.மு.க. ஆட்சியில் தான். 2025 அக்டோபர் 6 ஆம் தேதி புகார் வருகிறது. அக்டோபர் 7 ஆம் தேதியன்று எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுவிட்டது. சிறுமி யார் என்று கண்டுபிடிக்க இயலாத நிலையில், " இது தொடர்பாக ஏதேனும் ஆதாரமோ சாட்சியங்களோ கிடைக்கப் பெற்றால் மேற்காண் நீதிமன்ற உத்தரவுப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தான் காவல் உதவி ஆணையர் 19.2.2026 அன்று அறிக்கை கொடுத்துள்ளார். அடுத்து தேர்தல் வந்துவிட்டது. தேர்தல் நடைமுறைகள் வந்துவிட்டது. மே 10 ஆம் தேதி விஜய், முதலமைச்சர் ஆகிவிட்டார். காவல் துறை அவர் வசம் தான் இருக்கிறது. இவர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

★ இது குறித்து முழுமையான விசாரணை நடத்தினாரா? இல்லை!

★ 19.2.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை திரும்பப் பெற்றாரா விஜய்? இல்லை!

★ மேல் விசாரணைக்கு உத்தரவிட்டாரா? இல்லை!

★ ஜூன் 19 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது வழக்கை முடித்து வைக்கத் தான் வாதிட்டார் த.வெ.க. அரசின் வழக்கறிஞர். இதுவும் உண்மைதானே?

★ த.வெ.க. அரசின் வழக்கறிஞர் வாதங்களை போக்சோ நீதிமன்றம் ஏற்கவில்லை. அதன்பிறகு தான் கடுமையான உத்தரவுகளை போக்சோ நீதிமன்றமே பிறப்பிக்கிறது.

★ போக்சோ நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு கூட த.வெ.க. அரசு செயல்படவில்லை. ஜூன்மாதம்முடிந்துவிட்டது. ஜூலைமாதமும்முடிந்துவிட்டது. ஆகஸ்ட் மாதமும் முடியப் போகிறது. என்ன செய்து கொண்டு இருந்தார் போலீஸ் மந்திரி விஜய்?

★ ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் போக்சோ நீதிமன்றம் தலையில் குட்டுகிறது. அதன்பிறகு தான் ஆகஸ்ட் 28 ஆம் தேதி ஜெம் வீரமணியைக் கைது செய்கிறது விஜய் அரசு.

★ ஜூன் முதல் ஆகஸ்ட் வரை நடந்த பேரங்கள் என்ன? என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். விஜய் பதில் சொல்ல முடியுமா?

★ ஆகஸ்ட் 28 ஆம் தேதி ஜெம் வீரமணியைக் கைது செய்த போது காவல் துறை வெளியிட்ட அறிக்கையில், "சென்னை பெருநகர காவல் மத்தியக் குற்றப்பிரிவு விபச்சாரத் தடுப்புப் பிரிவில் 7.10.2025 அன்று வழக்குப் பதியப்பட்டது" என்று தான் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில் தான் ஜெம் வீரமணி, சாந்தி, மகேந்திர சிம்கன் ஆகியோர் கைது செய்யப்பட்டதாக த.வெ.க. ஆட்சியில் கொடுத்த அறிக்கையே உணர்த்துகிறது.

இதன்பிறகும், 'தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை இல்லை' என்று பொய் பேசலாமா? விஜய் பேசுவதற்கு முன்பே இப்பிரச்னை குறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை கொடுத்துவிட்டார். அதுவும் விஜய்க்கு தெரியவில்லை. 'நீங்கள் ஏன் பேசவில்லை?' என்று தி.மு.க. தலைவரைப் பார்த்துக் கேட்கிறார் விஜய். மூன்று நாளைக்கு முன்பே டயலாக் பேப்பரை படிக்கலாம். ஆனால் ஒரு அரசியல் தலைவராக இருப்பவர், அதுவும் முதலமைச்சராக இருப்பவர் மூன்று நிமிடத்துக்கு முன்பு வரை தனது உரையை படித்துப் பார்க்க வேண்டும். இது கூடவா தெரியாது.

**முதலமைச்சர் ஆகி நான்கு மாதம் ஆகிறது. நாட்டு மக்களுக்கு செய்த நன்மை என்று சொல்லி வாக்குக் கேட்க எதுமில்லை. பிஞ்சுக் குழந்தைகளைச் சீரழித்த ஒரு கேவலமான புகாரை நம்பி இடைத்தேர்தலில் வாக்கு கேட்க வருகிறார் விஜய். இதைவிடக் கேவலம் இருக்க முடியுமா?**

**"சிறுமிகள் பாலியல் பலாத்கார வழக்கை அரசியலாக்க வேண்டாம்" என்று அன்றைய தினம் காலையில் தான் சென்னை உயர்நீதிமன்றம் கண்டித்திருக்கிறது. அதன்பிறகும் மாலையில் ஒரு முதலமைச்சர் பேசுகிறார் என்றால் அவருக்கு எதுவுமே தெரியவில்லையா? அல்லது 'நம்மை யார் கேட்பது?' என்ற மமதையா?**

கட்டிய மனைவி கொடுத்த புகாரையே, 'அது வொர்த் இல்லை' என்று பொதுக்கூட்டத்தில் கமெண்ட் அடித்தவர் இவர். தனது ரசிகையைச் சீரழித்த எம்.எல்.ஏ.வைக் காப்பாற்றியவர். த.வெ.க. நிர்வாகிகள் மீதான பாலியல் புகார்கள் டி.ஜி.பி. அலுவலகம் வரை வந்து கொண்டு தான் இருக்கின்றன. இதில் எல்லாம் நியாயமான எந்த நடவடிக்கையும் எடுக்கத் துப்பு இல்லாதவர் கிளிசரின் கண்ணீரை மதுராந்தகத்தில் வடிக்கிறார்.

**குதிரை பேரத்தை விட குமட்டுகிறது விஜய்யின் மதுராந்தகம் உரை.**

# தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



**நாள் : 02.10.2026 - (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள் | இடம் |
|---|---|---|
| காலை 10.30 | தாராபுரம் நகரம் | தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ' |
| மாலை 5.00 | தாராபுரம் நகரம் | உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம் |

**தேர்தல் பணிக்குழு**

**101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி**

# தமிழ் இதழியலின் பிதாமகர் சி.பா.ஆதித்தனார் பிறந்த நாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, செப். 28-**

**ஐயா சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்த நாளையொட்டி நேற்று (27.09.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-**



"'செயற்கரிய செய்த பெரியார்' எனத் தந்தை பெரியாராலேயே பாராட்டப்பட்ட தமிழ் இதழியலின் பிதாமகர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாள்!

பாமரரும் உலக நடப்புகளைப் படித்தறிய ஏதுவாக எளிய மொழிநடையில் இதழியலை மாற்றியவர். இருமுறை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்; பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானபோது சட்டப் பேரவைத் தலைவர்; முத்தமிழறிஞர் கலைஞரின் அமைச்சரவையில் அமைச்சர் எனத் தடம் பதித்தவர்.

தமிழ் மொழிக்கும் தமிழ் இதழியலுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் ஐயா ஆதித்தனார் அவர்கள் ஆற்றிய பணிகளை இந்நாளில் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!"

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இதுதான் வெளிப்படையான அரசா?

# ஆர்.டி.ஐ. உரிமையைக் கட்டுப்படுத்துவது வெட்கக்கேடானது!

## த.வெ.க. அரசுக்கு – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, செப். 28-**

**சட்டம் ஒழுங்கு தொடர்பான முக்கிய விவரங்கள் இனி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படாது என த.வெ.க. அரசு புதிய அரசாணை வெளியிட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.**

த.வெ.க. ஆட்சியில் தமிழ் நாட்டின் சட்டம்ஒழுங்கு மிகவும் கேடுகெட்ட, மோசமான நிலைக்குச் சென்றுவிட்டதாக தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன. த.வெ.க. நிர்வாகிகள் மீதான பாலியல் புகார்கள், பெண்கள் பாதுகாப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு அலட்சியமாக செயல்படுவதாகவும் தொடர் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், சட்டம் ஒழுங்கு தொடர்பான முக்கிய விவரங்கள் இனி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படாது என த.வெ.க. அரசு புதிய அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி மாணவர்கள், விவசாயிகள், அரசியல் கட்சிகளின் போராட்டங்கள், காவல் மரணங்கள், துப்பாக்கிச் சூடு தொடர்பான அறிக்கைகள் RTIன் கீழ் இனி பெற முடியாது.

மேலும், சமூகசாதிய மோதல்கள், போராட்ட வழக்குகளை திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பான தகவல்களையும் RTIன் கீழ் பெற முடியாது. தவெக அரசு தனது தவறுகள், முறைகேடுகள் மற்றும் காவல்துறையின் மீதான புகார்களைப் பொதுமக்களிடம் இருந்து மறைக்கவே இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.



இந்நிலையில் RTI உரிமையைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது வெட்கக்கேடானது என திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், "வெளிப்படையான அரசு" என்று சொல்லி ஆட்சிக்கு வந்த தவெக அரசு, நான்கே மாதங்களில் மக்களை கேள்வி கேட்கக் கூடாது என்கிறது. 500க்கும் மேற்பட்ட கொலைகள் நடந்தும், சட்டம் ஒழுங்கைச் சீர்செய்ய திறனற்ற அரசு என்று விமர்சித்துள்ளார். இப்போது தனது தவறை மறைக்க, சட்டம் ஒழுங்கு குறித்த தகவல்களையே மக்கள் கேட்க முடியாதபடி RTI உரிமையைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது வெட்கக்கேடானது. இதுதான் மாற்றமா? என, கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கடுமையாக சாடியுள்ளார்.

**அரசாணை வாபஸ்!**

அரசின் இந்த முடிவுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்பு எழுந்ததால் த.வெ.க. அரசு அரசாணையை வாபஸ் வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், ஒரத்தி ஊராட்சியில், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.க. கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் திண்ணைப் பிரச்சாரம் மூலம் வாக்கு சேகரித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ்.தரணிவேந்தன், சி.என்.அண்ணாதுரை, முன்னாள் எம்.எல்.ஏ.ப.கார்த்திகேயன், பிரியா விஜயரங்கன்,ந.சீனுவாசன், இல.குணசேகரன், அருணை வெங்கட், எஸ்.கண்ணதாசன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் இருந்தனர்.